සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I)

காலம் 03 மணித்தியாலங்கள்

## நிர்வாகம் - (02-I)

විභාග අංකය
Index No / சுட்டெண்
.........................................

- **ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

---

01. எல்லா அரசாங்க நிறுவனங்களிலும் பிரஜைகள் பட்டயமொன்றை (Citizen Charter) காட்சிப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் தற்போது சுற்றறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்திற்கும் தனியான இணையத்தளமொன்று காணப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

(i) A பிரஜைகள் பட்டயமொன்றினால் (Citizen Charter) எற்புடைய அரசாங்க நிறுவனத்திற்கு கிடைக்கும் பிரயோசனங்கள் ஐந்தைக் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

B பிரஜைகள் பட்டயமொன்றினால் (Citizen Charter) பிரஜைகளுக்கு கிடைக்கும் நலன்கள் ஐந்தைக் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) பிரஜைகள் பட்டயமொன்றின் உள்ளடக்கத்திற்கு கவனம் செலுத்தி அரசாங்க நிறுவனமொன்றுக்கு இணையத்தளமொன்றை உருவாக்கும் போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் ஐந்தை (05) விளக்குக. (10 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 20)

02. தாங்கள் கடமையாற்றும் அரசாங்க நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் அதிருப்திக்குள்ளான சேவைப் பெறுநர் ஒருவர் அது தொடர்பில் குற்றங்குறைகூறி தங்களது நிறுவனத்தின் பொது மின்னஞ்சலுக்கு எழுத்துமூலம் விடயங்களை முன்வைத்துள்ளார். இது தொடர்பில் ஆராயும் போது சேவைப் பெறுநர் குறிப்பிட்ட விடயங்கள் உண்மை என உறுதிப்படுத்தப்பட்டது.
பொருத்தமான நிறுவனமொன்றை உதாரணமாகக் கொண்டு நடைமுறையில் நிகழமுடியுமான தவறொன்றை ஊகித்து அது தொடர்பில் கவனம் செலுத்தி சேவைப் பெறுநருக்கு அனுப்ப வேண்டிய பதில் மின்னஞ்சலை (e-mail) வரைவுசெய்க. (20 புள்ளிகள்)

03. (i) ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் பொது அரசாங்க நிறுவனமொன்று பின்பற்ற வேண்டிய பொதுவான ஏற்பாடுகளை விளக்குக. (08 புள்ளிகள்)

(ii) ஆரம்ப புலனாய்வுக்கும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைக்கும் மத்தியில் காணப்படும் வித்தியாசங்களை ஒப்பீட்டு நோக்குக. (12 புள்ளிகள்)

04. அரசாங்க சேவைக்கான ஆட்சேர்ப்புத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய அடிப்படை அம்சங்கள் தொடர்பில் கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

05. (i) "அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு லீவு என்பது உரிமையொன்றல்ல மாற்றமாக அது ஒரு வரப்பிரசாதமாகும்." இந்தக் கூற்றை நியாயப்படுத்துக. (10 புள்ளிகள்)

(ii) "அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு லீவு ஒரு வரப்பிரசாதம் என்ற போதிலும் அது அத்தியவசியமானது" இக்கூற்று தொடர்பில் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

06. நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு கவனம் லுெத்தி பின்வரும் தலைப்புக்கள் தொடர்பில் சிறு குறிப்பு எழுதுக.

(i) செயலூக்கமுள்ள சேவைக் காலம்

(ii) சேவைப் பிரமாணக் குறிப்பு

(iii) சேவை அவசியத்தின் பேரிலான இடமாற்றம்

(iv) நியமனத்தை முடிவுறுத்தல்

(புள்ளிகள் 5x4=20)

*************